**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.118/2021**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **அமுல்ராமன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(08.04.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது அயன்மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது ஆந்திராவில் உள்ள சட்டகல்லுரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். கடந்த 03.03.2021ம் ஆண்டு இரவு 8.30 மணியளவில் அயன்மேட்டுபட்டி மலைராமன் கோவில் உண்டியல் காணாமல் போனது சம்பந்தமாக எங்கள் ஊர் மக்கள் அனைவரும் சம்பவயிடத்திற்கு சென்றார்கள். நானும் சென்றேன். அந்த உண்டியலை யார் உடைத்து திருடினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது., எதிரி முத்துபாண்டி பற்றியும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 03.03.2021ம் தேதி இரவு 8.30 மணியளவில் நானும் எங்கள் ஊரைச் சார்ந்த ஓம்குமார், கண்ணுசாமி, ராம்கவின் ஆகியோருடன் ஆஞ்சயநேயர் கோவிலில் சாமி கும்பிட்டுகொண்டிருக்கும் போது கோவிலில் உடைக்கும் சத்தம் கேட்டு

நாங்கள் சென்று பார்த்த போது அப்போது எதிரி முத்துபாண்டி என்பவர் உண்டியலை உடைத்துக் கொண்டிருப்பது பார்த்து நாங்கள் சத்தம் போட்டோம். அவர் அங்கியிருந்து ஓடிவிட்டதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**